
பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 12 சனிக்கிழமை 28.09.2024 கதிர் 325

இ னி து ரகசியம் அல்ல!



பெயரளவில் தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டுதிரியும்தமிழ்கட்சிகள் அனைத்தையும் ஒன்று சேர்க்கும் கைங்கரியத்தில் கொழும்பில் உள்ள இந்தியத்தூதரகம்மும்முரமாகக் ☞ 2

# வலி. வடக்கு வீதிகளையும் விடுவிக்க உத்தரவிடுங்கள்

## ஜனாதிபதியிடம் அங்கஜன் கோரிக்கை



கொழும்பில் ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் மூடப்பட்டிருந்த இரண்டு வீதிகளைமீண்டும்மக்கள்பாவனைக்காக திறக்கப்படுவதற்குஜனாதிபதிஉத்தரவிட்ட நிலையில், யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்குப் பகுதியில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 4 வீதிகளையும் திறப்பதற்கு நடவடிக்கைஎடுக்குமாறுஜனாதிபதிஅநுர குமார திசாநாயக்கவுக்கு யாழ்ப்பாண தேர்தல்மாவட்டமுன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

போர்முடிவடைந்து15வருடங்கள் கடந்துள்ளபோதிலும்,பொதுமக்களின் வாழ்க்கைக்கு முக்கியமான பல வீதிகள் யாழ்ப்பாணத்தில் மூடப்பட்டுள்ளதால், இந்தப் பகுதிகளில் உள்ள மக்களின் அன்றாட நடவடிக்கைகள் மற்றும்போக்குவரத்துசெயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக,யாழ்ப்பாணம்-பலாலி வீதி (கிழக்கு பக்கம்): வயாவிளான் மத்தியகல்லூரிக்குஅடுத்துள்ளஉயர் பாதுகாப்பு வலயத்தில் எஞ்சியுள்ள வீதி இராணுவ கட்டுப்பாடுகளில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும். இந்த வீதி பருத்தித்துறை பொன்னாலை வீதியுடன் இணைவதுடன் உள்ளூர் போக்குவரத்திற்குஇன்றியமையாததாகும்.

அச்சுவேலிவயாவிளான்-தோளக்கட்டி வீதி: இந்த முக்கிய வீதி மூடப்பட்டுள்ளதால், அப்பகுதியிலுள்ளமுக்கிய மானஅரசமற்றும்தனியார் நிறுவனங்களுக்கு செல்வதற்கு இடையூறாக உள்ளது.

வயாவிளான் யாழ் விமான நிலைய ஓடுபாதை பக்க வீதி: கட்டுவன் சந்தி ஊடாக இந்த வீதியை ☞ 8

## மற்றுமொரு புது நியமனம்

ஜனாதிபதிஅநுரகுமாரதிசாநாயக்கவினால், ஜனாதிபதி அலுவலகத்தின் சட்டப்பணிப்பாளர் நாயகமாக சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எம். விஜேபண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி ☞ 8

## பதில் பொலிஸ் மா அதிபர் ஜனாதிபதியால் நியமனம்

அரசியலமைப்பில்ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் பதில் பொலிஸ்மா அதிபராக பிரியந்த வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமத்திய மாகாணத்தின் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய இவர்பொலிஸ்சேவையில்36வருடகாலம்அனுபவமுள்ளவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் முதன்முதலாக பொலிஸ் கான்ஸ்டபிளாக தனது சேவையை ஆரம்பித்துள்ளார். இவரது நியமனக்கடிதம் ஜனாதிபதியின்செயலாளர்நந்திகசனத் ☞ 8

## தேர்தல் அரசியலில் இருந்து விலகினார் விக்னேஸ்வரன்

# மூத்த தமிழ் தலைவர்கள் எல்லோரும் தேர்தலில் இருந்து ஒதுங்கவேண்டும்

## இளைஞர்களுக்கு வழிவிடுங்கள் என்றும் அழைப்பு



இளையோருக்கு இடமளித்து இம்முறை தேர்தலில்போட்டியிடமாட்டேன்ஆனால்எனது அரசியல் சேவை தொடரும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். தன்னைப் போலவே ஏனைய கட்சிகளில் உள்ளவர்களும் இளைஞர்களுக்கு இடமளித்து தேர்தல் அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இதுதொடர்பில்அவர்வெளியிட்டுள்ளஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ☞ 2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: ரூ. 246 மில். கிடைத்தது

### ரூ. 62 மில். நட்டஈடாகச் செலுத்தப்பட்டது

ஈஸ்டர்ஞாயிறுபயங்கரவாததாக்குதல் வழக்கு தொடர்பாக 246 மில்லியன் ரூபா நட்டஈடு பெறப்பட்டுள்ளதாக மேலதிக சட்டமா அதிபர் திலிப பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றத்தில்உயிர்த்தஞாயிறு தாக்குதல்சம்பந்தமாகபாதிக்கப்பட்டவர்கள் சார்பிலான இழப்பீட்டைக் கோரும்வழக்கு விசாரணையின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காகஇதுவரையில்62மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் ☞ 8

## முன்னாள் எம்.பிக்களின் பாதுகாப்பு மீளபெறப்பட்டது

முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் தனிப்பட்ட பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த அனைத்துபொலிஸ்உத்தியோகத்தர்களும் மீள அழைக்கப்பட்டுள்ளனர் என சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர்லலித்பத்திநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில்,முன்னாள் சபாநாயகர், முன்னாள் பிரதி சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின்பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ளபொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். ☞ 2

## காற்றாலை, மணல் அகழ்வுக்கு எதிராக தபாலட்டைப் போராட்டம்

### மன்னார் நகரில் நேற்று முன்னெடுப்பு

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் மன்னார் பேருந்து தரிப்பிடத்தில் இன்று இந்த தபாலட்டைகளைஅனுப்பும்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான மக்கள், மத தலைவர்கள், சமூகசெயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி, பிரதமருக்கான தபாலட்டைகளை அனுப்பி வைத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாககாற்றாலைமின்உற்பத்தி நிலையத்துக்கானகோபுரம்அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை முன்னெடுத்து வந்தனர்.

அதன் பின்னர், மன்னாரில் காற்றாலை மின் கோபுரம் அமைத்தல், மணல் அகழ்வில் ஈடுபட வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து மக்கள் தொடர்ந்து எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்தனர்.

இவைதொடர்பில்கடந்தகாலங்களில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட உரிய அதிகாரிகளிடம் கோரிக்கைகளை முன்வைத்தபோதும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், தற்போதைய ஜனாதிபதிமற்றும்பிரதமர்ஆகியோருக்கு இந்த திட்டம் அப்பகுதி மக்களுக்கு ஏற்படுத்தக்கூடிய பாதகமான விளைவுகளை எடுத்துக்காட்டி, கொழும்பில்உள்ளஅலுவலகங்களுக்கு மக்களின்கோரிக்கைகள்அடங்கியதபால் அட்டைகள்அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தனது தேர்தல் பிரச்சாரங்களின்போது, தான் ஜனாதிபதியாகவந்தால், மன்னார் ☞ 8

## எதிர்க் கட்சிகளின் பெரும் கூட்டுக்கு ஐ.தே.க. தொடர்ந்து கடும் முயற்சி

அனைத்து எதிர்க் கட்சிகளையும் இணைத்துக்கொண்டுபெரும்தேர்தல் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கே ஐக்கிய தேசியக் கடச் முயன்று வருகின்றது என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில்போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியகட்சிஎடுத்துவரும்நடவடிக்கை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தற்போது அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் எதிர்க்கட்சியில்இருக்கும்அனைத்துக் கட்சிகளையும்இணைத்துக்கொண்டு தேர்தலுக்கு முகம்கொடுப் ☞ 8

## ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவதற்கு முடியாது

### முன்னாள் அமைச்சர் பிரசன்ன அறிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படமுடியாது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்னரணதுங்கதெரிவித்தார்.

இடம்பெறவுள்ளநாடாளுமன்ற தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடுவது தொடர்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில்மக்கள் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று வாக்களித்து புதிய ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்திருக்கின்றனர். தொடர்ந்து ஒரே தரப்பினர் ☞ 8

## இனி இது .....

களமிறங்கியுள்ளது என்று தெரிகின்றது. தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்ற பெயரில் ஜனாதிபதித் தேர்தலில் அரியநேத்திரனைக் களமிக்கி மூக்குடைபட்ட இரட்டைவேட அரசியல் தலைவர்கள் இந்தியத் தூதரகத்தின் கால்களில் சென்று விழுந்ததைத் தொடர்ந்து, நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி உட்பட தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாவற்றையும் ஒரே அணியாகப் போட்டியிடச்செய்வதற்கு இந்தியத் தூதரகம் அழுத்தம் கொடுத்து வருகின்றது என்று நம்பகமாக அறியமுடிந்தது.

புதுடில்லியின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றதா என்பது தெளிவில்லாத நிலையிலும் கொழும்பில் உள்ள தூதரகம், ஜேவிபியின் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் பலம் பெறுவதைத் தடுக்கும் வகையில் எதிரணியினரைப் பலப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்திலும் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியை முழுமையாகக் கைப்பற்றிவிட்டால், இலங்கையில் இந்திய முதலீட்டாளர்களின் திட்டங்களுக்குப் பாதிப்பு வருமோ என்கிற அச்சம் காரணமாகவே தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் முழுமையான பெரும்பான்மையைப் பெறுவதைத் தடுக்கும் வகையில் எதிரணியினரை ஒன்றிணைத்து வெற்றிபெற வைப்பதில் இந்தியத் தூதரகம் அக்கறையோடு செயற்படுகின்றது என்று கூறுகிறார்கள்.

மன்னாரில் இந்தியாவின் அதானி நிறுவனத்திற்குச் வழங்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை தான் தடுத்து நிறுத்துவேன் என்று ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே அநுரகுமார திசநாயக்க மக்களுக்கு உறுதியளித்திருந்தார். மன்னார் மக்கள் கடுமையாக எதிர்க்கும் இந்தத் திட்டத்தை இலங்கை முழுவதும் இருக்கும் சுற்றுச்சூழலியலாளர்களும் எதிர்த்து வருகின்றார்கள். வலசை வரும் பறவைகளின் பாதையில் இந்தக் காற்றாலைகள் அமைக்கப்படுவதால் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்று அவர்கள் கண்டிக்கின்றனர். இதனாலேயே அந்தத் திட்டத்தை நிறுத்-துவதில் புதிய ஜனாதிபதி உறுதியாக உள்ளார்.

அநுரவின் இதுபோன்ற இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதாயின் நாடாளுமன்றத்தில் பலமான எதிரக்கட்சி அவசியம் என்று கருதும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் அதற்காக நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் ஆசனங்களை அதிகரிப்பதில் அக்கறையோடு செயற்படுகின்றது. இதன் ஒரு பகுதியாகவே இரட்டைவேடம் போட்டு ரணிலுக்கும் ஆதரவு பொது வேட்பாளருக்கும் ஆதரவு என்று செயற்பட்ட அரசியல்வாதிகளையும் 'பார் (யழிஷ) லைசென்ஸ்' அரசியல்வாதிகளையும் தமிழ் அரசுக் கட்சியினரையும் ஒரே அணியாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைக்கப்பதற்கு இந்தியத் தூதரகம் கடும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது. இது தொடர்பில் கட்சிகளின் தலைவர்களை அழைத்து அவர்களிடம் தனித் தனியாகப் பேசிவரும் இந்தியத் தூதரகம், எல்லோரையும் ஒன்றாகப் போட்டியிடுமாறு மிரட்டல் தொனியில் பேசிவருவதாகவும் தெரிகிறது.

தூதரகத்தின் இந்தச் செயற்பாடு தமிழ் மக்கள் மத்தியில் கடும் கோபத்தைக் கிளறியிருக்கின்றது. கொழும்பு அரசிடம் தமிழர்களுக்கு ஆதரவாக ஒரு துரும்பைக்கூட அசைக்காத, அசைக்க முடியாத இந்தியா தனது தேவைக்காக தமிழர்களை மட்டும் கிள்ளுக்கீரை போன்று பயன்படுத்தப்பார்க்கின்றதா என்று அவர்கள் சீறத் தொடங்கியிருக்கிறார்கள். நேர்மையற்ற அரசியல் தலைவர்களையும் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு பின்கதவால் முழு ஆதரவு வழங்கிக்கொண்டு மறுபக்கத்தில் தமிழ்த் தேசியவாதிகள் போன்று தம்மை முன்னிறுத்திச் செயற்படும் போலி அரசியலாளர்களுடன் நேர்மையாகச் செயற்படும் அரசியல்வாதிகளையும் ஒன்றிணைப்பதன் மூலம் தமிழ் அரசியல் ஒருபோதும் எழுச்சிபெற முடியாத நிலையை உருவாக்குவதில் கருத்தோடு செயற்படும் இந்தியத் தூதரகத்தின் இந்த முயற்சி தமிழர்கள் மத்தியில் இந்தியாவுக்கு எதிரான உணர்வுகளை இந்தத் தேர்தலில் மீண்டும் கிளர்ந்தெழ வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

..................

தமிழ்த்தேசியப்பொதுக்கட்டமைப்பிற்குள் போலித் தேசியம் பேசும் தமிழ்க் கட்சிகளைச் சேர்த்துக்கொண்டதே தமிழ் மக்கள் பொதுச் சபையினர் செய்த மாபெரும் தவறு என்பதை இந்தப் பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருக்கிறேன். தமிழ் பொது வேட்பாளரை அல்லது தமிழ்த் தேசக் கட்டுமானத்தை, தமிழ்த் தேசிய மீளெழுச்சியை தமிழ் மக்கள் பொதுச் சபையினரே முன்னெடுத்திருக்க முடியும். முன்னெடுத்திருக்கவேண்டும். ஆனால், இந்தப் போலித் தேசியக் கட்சிகளுக்கு வெள்ளையடித்து அவற்றை மக்கள் முன் தமிழ்த் தேசியவாதிகளாக நிறுத்தி வாக்குக் கொள்ளையில் ஈடுபடமுயல்வது அயோக்கியத்தனம் என்பதுதான் எனது கருத்தாகத் தொடக்கம் முதலே இருந்து வந்திருக்கிறது. கட்சிகளின் அந்த அயோக்கியத்தனத்தை இப்போது பொதுச் சபையினர் நன்கு அனுபவிக்கிறார்கள். இந்தப் போலித் தமிழ்த் தேசியக் கட்சிகள் அவர்களின் முதுகில் ஓங்கிக் குத்திவிட்டார்கள்.

பொதுக் கட்டமைப்பு சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் அரியநேத்திரனைக் களமிறக்கித் தமது முயற்சியில் பொதுச்சபையினர் தோற்றுப் போயிருந்தாலும் அரியத்தாருக்குக் கிடைத்த இரண்டு லட்சத்து 26 ஆயிரம் வாக்குகளைப் பெறுவதற்குக்கூட முன்னின்று அதிகம் உழைத்தவர்கள் பொதுச் சபையினரே. இந்தப் போலித் தேசியவாதிகள் பின்கதவால் ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து பரப்புரைகளில் கலந்துகொள்ளாமல் விட்டுவிட்டு ஒப்புக்குச் சப்பாணியாக மட்டுமே தேர்தலில் வேலை செய்தார்கள். ஆனால், இன்று தேர்தலில் சங்குச் சின்னம் ஓரளவுக்கு மக்கள் மத்தியில் அறிமுகமாகிவிட்டது என்பதால் அதனைத் திருடுவதற்கும் திட்டம் போட்டுவிட்டார்கள்.

வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினருக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபையினருக்கும் மற்றைய இரு தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில், பொதுக் கட்டமைப்பாக நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது என்பது தொடர்பில் ஒரு உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை. இரண்டு நாள்களில் அது தொடர்பில் ஆராய்ந்து முடிவு தெரிவிப்பதாக பொதுச் சபையினர் தெரிவித்திருந்தனர். அதன்படி அவர்களின் முடிவு இன்று அறிவிக்கப்படவேண்டும். அதேநேரம் பொதுக் கட்டமைப்பாகக் கேட்பதாக இருந்தால் சங்குச் சின்னத்தில்தான் கேட்பது என்று அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இருந்தாலும் அந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பொதுச் சபையினர் தம்மோடு இசைந்து போய் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளமாட்டார்கள் என்பதை ஜனநாயகக் கூட்டணியினர் மோப்பம் பிடித்துவிட்டனர். கூட்டத்தின் முடிவில் பொதுச் சபையினரின் கருத்தும்கூட பொதுக்கட்டமைப்பாகப் போட்டியிடுவதா இல்லையா என்பது பொதுச் சபையினரின் கைகளில்தான் தங்கியிருக்கிறது என்ற வகையிலேயே இருந்தது. இதனால் பொதுக் கட்டமைப்பின் சங்குச் சின்னத்தைத் தமக்குரியதாக்கிக் கொள்வதில் ஜனநாயகக் கூட்டணி முனைப்போடு இருக்கின்றது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சங்குச் சின்னத்தை தமது கட்சிச் சின்னமாக மாற்றுவதற்கான விண்ணப்பத்தை புளொட் அமைப்பு ஏற்கனவே தேர்தல் திணைக்களத்திடம் கையளித்துவிட்டதாகத் தெரிகிறது. இதைத்தான் தாங்கள் செய்யப்போகின்றோம் என்று புளொட் தலைவர் சித்தார்த்தன் வியாழக்கிழமை இரவேபல ஊடகர்களுக்கும் தெரிவித்திருந்தார். நேற்று எனது பத்தியில் அதனையும் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் கீழ் தாம் ஒருபோதும் போட்டியிடப்போவதில்லை என்று விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியும் ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கமும் அந்தக் கூட்டத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்த நிலையிலும், ஜனநாயகக் கூட்டணியின் சின்னமாக சங்கை மாற்ற இப்போது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இந்தக் கட்சிகளை நம்பிப் போன பொதுச் சபையினருக்குத் தரமான சம்பவம் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இனியாவது அவர்களுக்குப் புத்தி வருகின்றதா என்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

..................

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று வவுனியாவில் நடைபெறுகின்றது. கட்சிக்குத் துரோகம் செய்து பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்த 'எட்டப்பர்' அணியின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து கட்சியைவிட்டு வெளியேற்றினால் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குகள் பாதிக்கப்படுமோ என்று கட்சிக்குள் சிலர் மட்டும் அஞ்சும் நிலையில் இன்றைய கூ-ட்டத்தில் சுவாரஸியங்களுக்குப் பஞ்சம் இருக்காது என்று தெரிகிறது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

# வங்கி வட்டி வீதங்கள் அப்படியே தொடரும்

நாட்டின் சமகால பொருளாதார நிலவரங்களை கருத்திற்கொண்டு வட்டி வீதங்களை முன்னைய மட்டத்திலேயே பேணுவதற்குத் தீர்மானித்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

நாணயச் சபையின் இவ்வாண்டுக்கான 5ஆவது மீளாய்வுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அறிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார். கொழும்பிலுள்ள மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நேற்று இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாணயச் சபையானது கொள்கை வட்டிவீதங்களான துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் ஆகியவற்றை முறையே 8.25 சதவீதம் மற்றும் 9.25 சதவீதம் ஆகிய தற்போதைய மட்டங்களிலும், நியதி ஒதுக்கு வீதத்தை 2 சதவீதமாகவும் தொடர்ந்து பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது.

அதேபோன்று எதிர்வரும் சில காலாண்டுகளில் பணவீக்கம் 5 சதவீதத்துக்குக் கீழான மட்டத்தில் பேணப்பட்டு, நிர்ணயிக்கப்படும் விலைகள் மற்றும் நிரம்பல் நிலைமைகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களால் எதிர்காலத்தில் பணச்சுருக்கம் பதிவாகும்.

இருப்பினும் அண்மையில் மின்சாரத் தீர்வைகள், எரிபொருள் மற்றும் பெற்றோலிய எரிவாயு போன்றவற்றின் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட கீழ்நோக்கிய திருத்தங்களாலும், உணவுப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சியினாலும் முதன்மைப் பணவீக்கம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்தது.

அதேவேளை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் பிரகாரம், நாட்டின் பொருளாதாரம் இவ்வருடத்தின் முதலாம் காலாண்டில் 5.3 சதவீத விரிவாகத்தினையும், இரண்டாம் காலாண்டில் 4.7 சதவீத வளர்ச்சியையும் பதிவு செய்திருக்கிறது.

அண்மைய பொருளாதாரக் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், 2024இன் முதலாம் அரையாண்டில் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சிப்போக்கு, ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியிலும் தொடரும் எனவும், அது தொடக்கத்தில் எதிர்வுகூறப்பட்டதை விட உயர்ந்த வளர்ச்சியாக அமையும்

இது இவ்வாறிருக்க, அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போது சமகால பொருளாதார நிலைவரங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டதாகவும், குறுங்காலத்தில் அடைய எதிர்பார்க்கும் அடைவுகள் மற்றும் அதற்குரிய நடவடிக்கைகள் தொடர்பில் எடுத்துரைக்கப்பட்டது. அச்சந்திப்பின்போது விரிவாக எதுவும் கலந்துரையாடப்படவில்லை.

அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்டத்தின் கீழான நிபந்தனைகளுக்கு அமைவாகத் தொடர்ந்து நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதா அல்லது அவை குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவதா என்ற தீர்மானம் நிதியமைச்சினாலேயே மேற்கொள்ளப்படும்;, இருப்பினும் நாணய நிதியத்துடனான ஒத்துழைப்புக்கள் தொடரும் என ஜனாதிபதி சில தினங்களுக்கு முன்னர் ஆற்றிய உரையில் உத்தரவாதம் அளித்திருக்கிறார் என்றார்.

# ஊழல் ஒழிப்புக்கு ஜப்பான் முழு ஆதரவு

ஊழல் மற்றும் முறைகேடுகளை இல்லாதொழிக்கும் வேலைத்திட்டத்துக்கு ஜப்பான் அரசு முழு ஒத்துழைப்பு வழங்கும் என தெரிவித்துள்ள இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி, இலங்கையுடன் தொடர்ந்தும் ஜப்பான் நெருக்கமாக செயற்பட தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஜப்பானிய அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள 11 திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் எனவும் ஜப்பான் தூதுவர் உறுதியளித்தார்.

ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை நேற்று சந்தித்த போதே இதனைக் குறிப்பிட்டார்.

அதன்படி கண்டி நகர நீர் முகாமைத்துவத் திட்டம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டம், தொலைக்காட்சி ஒலிபரப்பை டிஜிட்டல் மயமாக்கல், தேசிய ஒலிபரப்பு மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தித் திட்டம், அனுராதபுரம் வடக்கு நீர் திட்டத்தின் இரண்டாம் கட்டம், கிராம உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்,

களு கங்கை நீர் வழங்கல் திட்டம், சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியன விரைவில் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன் ஜப்பானிய உதவியின் கீழ் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களில் இறுதி கட்டத்தை எட்டியிருக்கும் ஹபரண- வெயங்கொட மின் கடத்தல் வலையமைப்பு மற்றும் அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் திட்டம் என்பவற்றை நிறைவு செய்ய எதிர்பார்த்திருப்பதோடு,

முழுமைப்படுத்தப்பட்டிருக்கும் களனி கங்கை புதிய பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்கான கொடுப்பனவுகளை நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாக ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி இதன்போது தெரிவித்தார்.

இதன்போது இலங்கைக்கான ஜப்பான் தூதரகத்தின் பிரதித் தலைவர் நயோக்கி கமோஷிடா மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகே ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மூத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது கட்சியான தமிழ் மக்கள் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் தமிழ்த் தேசியத்தை சிதைய விடாது பாதுகாத்துக் கொண்டு தமிழ் மக்களிற்குரிய உரித்துக்களை வென்றெடுப்பதே ஆகும். இதன்பொருட்டு அரசியல் அனுபவங்கள் உள்ளவர்களையும் இளைஞர்களையும் ஒள்றிணைத்து தமிழ் மக்களுக்கான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றோம்.

அந்த வகையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் என்னை நம்பி வாக்களித்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பியிருந்தார்கள். எமது கட்சியில் உள்ள துடிப்பு மிக்க இளைஞர்களுக்கு வழிவிட்டு அரசியலில் முதிர்ச்சி உள்ளவர்கள் அவர்களுக்கு பக்கபலமாக நின்று வழிகாட்ட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

என்னைப் போல் மற்றைய தமிழ் கட்சிகளில் உள்ள அரசியல் முதிர்ச்சி கொண்டவர்கள் தாம் வழி காட்டியாக நின்று கொண்டு இளைஞர்களுக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் விடவேண்டும் என நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

இதற்கு முன்மாதிரியாக நான் எமது தமிழ் மக்கள் கூட்டணியின் பணிகளில் தொடர்கின்ற அதேவேளை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடாது

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர் இருப்பைப் பாதுகாப்பதற்காக தமிழ்க் கட்சிகள் திரளவேண்டுமாம்

## சிவமோகன் அழைப்பு



எதிர்வரும் தேர்தலில் சகல கட்சிகளும், ஒற்றுமை என்று சொல்லி காலத்தை வீணடிக்காமல் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக தமிழரசுக் கட்சியின் வீட்டு சின்னத்தில் ஒன்றாக போட்டியிட வேண்டும் என்று வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது:

எதிர்வரும் பொதுத்தேர்தலானது தமிழர்களின் ஒற்றுமையைவலுப்படுத்திஇருப்பைக்காக்கவேண்டிய ஒரு தேர்தல். அந்த ஒற்றுமையை வலியுறுத்தும் வண்ணம் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என 11 பேர் புதன்கிழமை மாவை சேனாதிராசாவை சந்தித்துக் கலந்து ரையாடினோம்.

சகல கட்சிகளையும் உள்வாங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக - தமிழ்த் தேசிய அணியாக - செயற்படுவதை வலியுறுத்தியே அந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

எனவே அனைத்து கட்சிகளும் ஒற்றுமை என்று சொல்லி காலத்தை வீணடிக்காமல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக தமிழரசுக் கட்சியின் வீட்டு சின்னத்தில் ஒன்றாக போட்டியிட வேண்டும். இது எனது சொந்த கருத்தாக இருந்தாலும் தமிழரசுக் கட்சியின் அதிகமானோரது நிலைப்பாடும் இதுவே.

இது தொடர்பான இறுதி முடிவை எமது கட்சியின் மத்திய குழு விரைவில் எடுக்கும். அதன் பின்னர், மாவை சேனாதிராசா ஏனைய கட்சிகளுடன் பேச்சு முன்னெடுத்து அதனை எமது மத்திய குழுவுக்கு அறிவிப்பார்.

மிக குறுகிய காலமே எமக்கு உள்ளது. எனவே விவேகமாக சிந்திக்கவேண்டும். பிரிந்து நின்று தேர்தலை சந்தித்தால் தமிழர்களது இருப்பு கேள்விக்குறியாக்கப்படும்.

நாடாளுமன்றுக்கு புதியவர்கள் தேவை. இளைஞர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்பது உண்மை. அதேநேரம் நாடாளுமன்றில் தமிழ்த் தேசிய இருப்பை தக்கவைப்பதற்கு ஆளுமையான அனுபவமுடைய மூத்தவர்களும் தேவை.

கடந்த காலங்களில் பங்காளி கட்சிகளுக்கு வன்னி மாவட்டத்தில் அதிகமான ஆசனங்கள் கொடுக்கப்பட்டு யாழ். மாவட்டத்தில் கொடுக்கப்படாத நிலைமை இருந்தது. அதனை ஒற்றுமையாகவே நாம் செய்தோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு கட்சி மேலோங்கி இருக்கிறது. அது ஒரு தீர்க்கப்படமுடியாத பிரச்சினை அல்ல.

அத்துடன் தமிழர்களது விடயங்களை முன்னிலைப்படுத்தி கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் தமிழ் மக்களுக்கு தேவையான விடயங்களில் அரசாங்கத்துடன் இணங்கி செல்லவேண்டிய நிலைமையும் ஏற்படும். இது தொடர்பாகப் பரிசீலிப்போம்.

இதேவேளை மதுபான நிலையத்துக்கான அனுமதிப்பத்திரத்தை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொண்டனர் என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரங்களை இதுவரை நான் பார்க்கவில்லை. அது இன்று வரை எமது கைகளில் கிடைக்கவில்லை. - என்றார்.(05)

# அநுரவை ஜனாதிபதியாக தெரிவு செய்ததன் மூலம் இலங்கை மக்கள் புதிய வரலாற்றை எழுதியுள்ளனர்

## சீனத் தூதுவர் பாராட்டு



கௌரவம் பாதுகாப்பு அபிவிருத்தி ஆகியவற்றை பாதுகாப்பதற்கு உதவும் என இலங்கைக்கான சீன தூதுவர் குய் சென் ஹாங் தெரிவித்துள்ளார்.

சீன மக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டு 75 வருடங்களாகியுள்ளதைகுறிக்கும்நிகழ்வுகொழும்பில் இடம்பெற்றவேளை அந்த நிகழ்வில் சீன தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தனது இறைமை கௌரவம் பாதுகாப்பு அபிவிருத்தி ஆகியவற்றை அதிகளவிற்கு பாதுகாக்க முடியும் என்பதையும், இலங்கையால் பிராந்திய சர்வதேச விவகாரங்களில் மேலும் அதிகளவு பங்களிப்பு செய்ய முடியும் என்பதையும் இடம்பெற்றுள்ள சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் ஆற்றியுள்ள முதலாவது உரையில் சீன தூதுவர் இலங்கைமக்கள்புதியசகாப்தத்தில்நுழைந்துள்ளனர். அநுர குமார திசாநாயக்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்ததன் மூலம் புதிய வரலாற்றை எழுதுகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.

சீனா மற்றும் பிற நட்புநாடுகளின் ஆதரவு உதவியுடனும் ஜனாதிபதியின் வலுவான தலைமைத்துவம் இலங்கையின் விடாமுயற்சி புத்திசாலித்தனம் வீரம் நிறைந்த மக்கள் மூலமும் இலங்கை நிச்சயமாக அனைத்து ஆபத்துகளையும் சவால்களையும் வெற்றிகொள்ளும் என கருதுவதாக சீன தூதுவர் தெரிவித்துள்ளார்.(05)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் இராஜினாமா செய்தார்



பெற்றோலிய சட்டக் கூட்டுத்தாபனத்தின்தலைவர்சாலியவிக்ரமசூரிய தனது பதவிகளை இராஜினாமா செய்துள்ளார்.

அதன்படி, பெற்ரோலியம் சட்டப் பூர்வ கூட்டுத்தாபனம், சிலோன் பெற்ரோலியம்சேமிப்புமுனையங்கள் லிமிடெட் மற்றும் டிரின்கோ பெற்ரோலியம் டெர்மினல் ஆகிய மூன்று நிறுவனங்களின் தலைவர் பதவிகளில்இருந்துஅவர்இராஜினாமா செய்துள்ளார்.

புதிய அமைச்சருக்கு விருப்பமான குழுவை நியமிப்பதற்கு சுதந்திரம் வழங்குவதற்காக அவர் தனது பதவிகளை இராஜினாமா செய்வதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்தனதுஇராஜினாமாகடிதத்தை எரிசக்தி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

(05)

# கஞ்சாவுடன் பிரித்தானியர் விமான நிலையத்தில் கைது

43 கோடி 64 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான கஞ்சா தொகையுடன் பிரித்தானியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

21வயதுடைய பிரித்தானியப் பிரஜை ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சந்தேக நபர் தாய்லாந்தின் பேங்கொக் நகரத்திலிருந்து வியாழக்கிழமை காலை 09.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பின்னர், சந்தேக நபர் விமான நிலையத்தின் அனைத்து சோதனை நடவடிக்கைகளையும் முடித்துவிட்டு பச்சை வழித்தடம் வழியாக விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது மீண்டும் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 43 கிலோ 648 கிராம் கஞ்சா தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

# கொழும்பு - கண்டி வீதியில் பஸ் மோதி வயோதிபப் பெண் சாவு

வரக்காப்பொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொழும்பு-கண்டிவீதியில்பஸ்மோதி வயோதிபப்பெண்ஒருவர்உயிரிழந்துள்ளார் என வரக்காப்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று வீதியில் பயணித்த வயோதிபப் பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது, படுகாயமடைந்த வயோதிபப் பெண் வரக்காப்பொல வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டபின்னர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

துல்ஹிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந் துள்ளார். இதனையடுத்து, பஸ் சாரதி சந்தேகத்தின்பேரில்கைதுசெய்யப்பட்டுள் ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பானமேலதிக விசாரணை களை வரக்காப்பொல பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஈழத் தமிழருக்கு அதிர்ச்சயளிக்கும் இந்தியத் தூதரகத்தின் நகர்வு

**ஈழத்தமிழர்களின்அரசியலில்கொழும்பில்உள்ளஇந்தியத் தூதரகம்மீண்டும்நேரடியாகத்தலையிடத்தொடங்கியிருப்பது குறித்த தகவல்கள் அதிர்ச்சியளிக்கின்றன. அதிலும் தமிழ் மக்களால் நிராகரிக்கப்படும் விளிம்பு நிலையில் நிற்கும் அரசியலாளர்களை மீண்டும் பதவிக்குக் கொண்டுவரும் வகையில் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைக்குத் தூதரகம் அழுத்தம் கொடுப்பது தமிழ் மக்களிடம் விசனத்தையும் கண்டனத்தையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.**

**தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்ந்தபோது, இந்தியமுன்னாள்பிரதர்ராஜீவ்கொலையைக்காரணம்காட்டி பொரும்பாலான காலங்களில் தமிழ் மக்களில் இருந்து தள்ளி ஒதுங்கிய இருந்தது இந்தியா. இறுதியில், புலிகளை அழிப்பதற்கு கொழும்பு அரசுடன் சேர்ந்து நின்று தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தது. ஏற்கனவே இந்திய அமைத்திப் படையை அனுப்பி இலங்கையில் தமிழ் மக்களைக் கொன்றொழித்ததுடன், பாலியல் வன்முறைகளிலும் ஈடுபட்டதன் மூலம் தமிழ் மக்களின் ஆன்மாக்களைக் காயப்படுத்தியிருந்த இந்திய அரசின் இந்தச் செயலால் தமிழர்கள் இந்தியா மீது வெறுப்பின் உச்சத்தில் இருந்தார்கள்.**

**போர் முடிந்த பின்னரும்கூட தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதில் இந்தியா ஒருபோதும் காத்திரமான பணியை ஆற்றியதில்லை. கொழும்புக்கு வலிக்காத இராஜதந்திர மொழிகளில் அரசமைப்பின் 13ஆவதுதிருத்தச்சட்டத்தையாவதுநடைமுறைப்படுத்தும்படி ஓர் அறிக்கைவிடுவதுடன் தமிழ் மக்கள் சார்பிலான தனது கடமையை முடித்துக்கொள்வதே இந்தியாவின் பணியாக இருந்தது. போர் முடிந்த இந்தப் 15 ஆண்டுகளில் இலங்கையில் தமிழர்களுக்கு ஒரு அரசியல் தீர்வு கிடைப்பதற்கு இந்தியா ஒருபோதும் தனது பிராந்திய வல்லாதிக்க நாடு என்ற அழுத்தத்தை முழுமையாகப் பயன்படுத்தியதில்லை.**

**இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாணசபைகளைமுடக்கிஅதற்கானதேர்தலைநடத்தாமல் கொழும்பு அரசு செயற்பட்டபோதுகூட தனது பலத்தைப் பயன்படுத்தி மாகாண சபைகளைச் செயற்படுத்துவதற்கு இந்தியா ஒருபோதும் முன்வந்ததில்லை. கொழும்புடனான உறவுகளில் இந்திய நலன்களை முதன்மைப்படுத்துவதில் மட்டுமே அது குறியாக இருந்தது. தமிழர்களாலும் அது புரிந்துகொள்ளப்பட்டது. இந்தியாவிடம் இருந்து அதிகம் எதிர்பார்க்க முடியாது என்கிற படிப்பினையை அவர்கள் ஏற்கனவே பெற்றிருந்த காரணத்தால் இந்தியாவின் அணுமுறைஅவர்களைப்பெரிதும்ஆச்சரியப்படுத்தியதில்லை. ஆனால் தொப்புள்கொடி உறவுகளான தமிழர்களை இந்தியாவில் கொண்டிருக்கும் நிலையில் அந்த நாடு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கவேண்டும் என்ற நப்பாசை மட்டுமே இருந்தது.**

**அதன் காரணமாக இந்தியாவிற்கு எதிரானவர்களாக ஈழத் தமிழர்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள் என்பதையும் குறிப்பாகச் சீனாவிற்கு வடக்கு கிழக்கு மண்ணில் ஒருபோதும் தமிழர்கள் இடமளிக்கமாட்டார்கள் என்பதையும் தமிழ்த் தலைவர்கள் பகிரங்கமாகவே வெளிப்படுத்திவந்திருக்கிறார்கள். இந்தியாவின்உண்மையான நண்பர்கள் ஈழத் தமிழர்களே என்று புதுடில்லிக்குப் புரியவைக்க அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் எதுவும் இந்தியாவின் இதயத்தைத் தொட்டதில்லை என்பதையும் ஈழத் தமிழர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.**

**இந்த நிலையில் இந்திய நலன்களுக்காக ஈழத் தமிழர்களைப் பகடைக் காய்களாக்கி அவர்களின் அரசியல் மீள் எழுச்சியைத் தடுக்கும் வகையில் இரட்டைவேட தமிழ் அரசியல்வாதிகளையும், போலித்தமிழ்த்தேசியவாதிகளையும் ஒருங்கிணைத்துநாடாளுமன்றத்தேர்தலில்போட்டியிடவைத்து தமிழர்களின் அரசியலை இந்தியா அழிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் சாவின் விளிம்பில் நிற்கும்இந்தகையஅரசியலாளர்களைஇலகுவில்விலைக்கு வாங்கிவிட முடி–யும் என்ற ஒரே காரணத்திற்காக மீண்டும் நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவருவதற்கு இந்தியத் தூதரகம் எடுக்கும் நடவடிக்கைகளை ஈழத் தமிழர்கள் ஆசேவத்தோடு எதிர்ப்பார்கள்.**

# அநுர சீனச் சார்பாளரா?

அனுரகுமார திஸாநாயக்க (ஏகேடி) ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முன்னரே அவரது தேர்தல் பயணத்தில் ஒரு வசந்தம் இருந்தது. அவர் மிகவும் நன்றாக உடை அணிந்து பொதுமக்கள் முன்னிலையில் கால் பதித்து, '2024 இலங்கையின் அதிபராக நான் பதவியேற்கும் ஆண்டு' என்று நம்பிக்கையை வெளிப்படுத்தினார். ஆனால் உண்மையில், இறுதி முடிவுகள் அறிவிக்கப்படும் வரைஜனாதிபதித்தேர்தலில்யார்வெற்றிபெறுவார்கள் என்ற சஸ்பென்ஸும் சந்தேகமும் தீவின் அரசியல் அரங்கில் நிலவியது.

பெரும் அதிர்ச்சியை அளிக்கும் ஓர் உண்மை என்னவென்றால், இலங்கையின் 2024 ஜனாதிபதித் தேர்தலில் சமீபத்திய தேர்தல்களில் 35 லட்சம் மக்கள் வாக்களிக்கவில்லை. இது மொத்த வாக்காளர்களில் 21.54 சதவீதமாகும். விரைவில் நடக்க இருக்கும்



பொதுத் தேர்தலில், இந்த வாக்காளர்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தும் வகையில் அவர்களைக் கவர்ந்திழுக்கும் வழிகளைப் பற்றி ஒருவேளைஅநுரகூடயோசித்துக்கொண்டிருக்கலாம்.

மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினரான இந்த 35 லட்சம் பேரும் தமது வாக்குரிமையை ஏன் பயன்படுத்தவில்லை என்பது விவாதத்திற்குரியது. இந்த வாக்காளர்களும் அரசியல் காட்சிகளின் நிலைமையை ஆய்வு செய்து, பொதுத் தேர்தல் என்று வரும்போது பொறுப்புள்ள குடிமக்களாக தங்கள் பங்கைச் செய்வார்கள் என்று சிலர் சொல்கிறார்கள்.

அதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா என்கிற கேள்வியும் இருக்கிறது. ஏனெனில் தற்போது ஜனாதிபதியாகி இருக்கும் அநுரகுமார சீனாவிற்கு நெருக்கமானவர், அவர் சீன அரசியல் நிகழ்ச்சிநிரலின்படி செயற்படக்கூடியவர் என்று உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் பலவும் கருதுகின்றன. அதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

அதற்கேற்ற வகையில் அவர் தனது அயலுறவுக் கொள்கையில் இந்தியாவிற்கு முக்கியமான இடம் இருக்கமுடியாது என்பதை ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கிறார். மன்னாரில் ரணில் ஆட்சியால் அதானிக்கு வழங்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை இல்லாமல் செய்வேன் என்று அவர் ஏற்கனவே தெரிவித்திருந்தார். இந்தத் திட்டம்இலங்கைக்குவரும்புலம்பெயர்பறவைகளின் வழித்தடத்திற்குபெரும்இடைஞ்சலாகஇருக்கும்என்று சுற்றுச்சூழலியலாளர்கள் கடும் கண்டனங்களையும் கவலைகளையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

இப்போது அநுர ஆட்சி அதிகாரத்தைத் தனது கைகளில் வைத்திருக்கிறார். அவர் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவாரா என்று மக்கள் காத்திருக்கிறார்கள். இது மட்டுமல்ல தேர்தல் பரப்புரைகளின்போது அவர் வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் அவர் நிறைவேற்றுவாரா என்று பார்க்க மக்கள் ஆவலாக உள்ளார்கள். அதை அவர் எப்படிச் செய்வார் என்பதே அதன் பின்னால் உள்ள மிக முக்கியமான கேள்வி.

இலங்கையின் அபிவிருத்திக்கும் பொருளாதார மறுமலர்ச்சிக்கும் இந்தியா தேவையில்லை என்றால் அவர் சீனா பக்கம்தான் சார்த்தாக வேண்டியிருக்கும். ஏற்கனவே மார்க்ஸியப் பின்னணியில் இருந்து வந்திருக்கக்கூடிய அவர் சீனா பக்கம் சாய்வதும் இயல்பானதே.

சீனா மற்றும் இலங்கையின் தற்போதைய தலைவர்கள் இருவரும் சோசலிசத்தின் சில விழுமியங்களை கடன் வாங்கி மக்களின் நலனை மேம்படுத்துவதில் விருப்பம் கொண்டுள்ளனர். சீனா ஒரு வளரும் கலப்பு சோசலிச சந்தைப் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. வர்த்தகம் செய்வதிலும் முன்னேறுவதிலும் சீனா நிச்சயமாக இலங்கையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தமுடியும். ஆனால்சீனாவில்உழைப்புக்கான கூலிமிகக்குறைவானது. அங்குதொழிற்சாலைகளின் பெருக்கத்திற்கும் வெளிநாட்டு முதலீடுகளுக்கும் அதுவே காரணமாக இருக்கின்றது. அதேபோக்கை அநுரவால் இலங்கையிலும் கடைப்பிடிக்க முடியுமா? இலங்கை தனது பணியாளர்களுக்கு மோசமான ஊதியத்தை கொடுக்க முடியுமா? அநுரவின் ஆதரவாளர்களில் அதிகம் பேர் சிறந்த தினசரி ஊதியம் பெறும் தொழிலாளர்கள், எனவே சீன மாதிரி எல்லாவற்றிலும் பொருத்தமானதுதானா என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

நாட்டில்தூய்மையானஅரசியலைமுன்னெடுப்பார் என்று அநுர உறுதியளித்துள்ளார். அவருக்கு நாடாளுமன்றஅரசியல்தொடர்பில்நீண்டஅனுபவம் உண்டு. வறுமைக்கு எதிரான கொள்கைகளை மேம்படுத்துவதற்கானதிட்டங்களைத்தொடங்குவதில் அவர் ஆர்வமாக இருக்கின்றார். அதற்கான திட்டங்களையும் கொண்டுள்ளார். அவர் மிகவும் சாதாரண குடும்பத்திலிருந்து வந்தவர். எனவே கீழ்தட்டு மக்களின் முன்னேற்றம் குறித்து அவருக்கு அக்கறை இருப்பது இயல்பானதே.

அவர் தற்போது தேசிய சக்திக்குத் தலைமை தாங்கினாலும், அவர் ஜேவிபியிலிருந்து வந்தவர். அவரது கூட்டணியில் இப்போது 21 குழுக்களைச் சேர்ந்த தனிநபர்கள் உள்ளனர். தேசிய மக்கள் சக்தி என்பது 2019 ஜனாதிபதித் தேர்தலின்போது உருவாக்கப்பட்டது. தேர்தலில் ஜேவிபி நீண்ட காலமாகவே தனித்துப் போட்டியிடுவதிலேயே நம்பிக்கை கொண்டிருந்தது. ஆனால் அரசியலில்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# அநுர சீனச் சார்பாளரா?

4ம் பக்க தொடர்ச்சி...........

ஏற்பட்ட கடுமையான வலிமிகுந்த தோல்விகளைத் தொடர்ந்து தம்மை ஒத்த எண்ணம் கொண்ட தனிநபர்கள், குழுக்கள் மற்றும் சிறு கட்சிகளுடன் கூட்டணி வைப்பதற்கு இறங்கி வந்தது.

அதன் விளைவாகவும் பாரம்பரிய அரசியல் கட்சிகள் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகவும் அநுரகுமார திசநாயக்க இப்போது இலங்கை அரசியலில் மூன்றாவது வெற்றிபெற்ற சக்தியாக எழுச்சி பெற்றுள்ளார். ஏனென்றால் இதுவரையில் பச்சை, நீலம், குரக்கன் சிவப்பு என்று மாறி மாறி வாக்களித்து வந்த இலங்கையர்கள் இப்போது முதல் தடவையாகக் குருதிச் சிவப்புக்கு வாக்களித்துள்ளார்கள். மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புகிறார்கள், எதிர்பார்க்கிறார்கள்.

அந்த மாற்றத்தை நிகழ்த்தவும் ஆட்சியைத் தக்கவைக்கவும் தேசிய மக்கள் சக்திக்கு இப்போது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் வேண்டும்.

இலங்கையில் பழைய சோசலிசக் கட்சிகள் 1960களில் காலனித்துவ ஆட்சியைக் கண்டித்துக் குரல் எழுப்பிய காலத்தில் மக்களிடம் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தன. ஆனால் அந்த நிலைமை இப்போது இல்லை. அநுரவின் எழுச்சியின் பின்னர் அத்தகைய ஒரு நிலை ஏற்படுமா என்பதும் பொறுத்திருந்து பார்க்கவேண்டிய ஒன்றுதான்.



புதிதாகப் பதவியேற்றிருந்தாலும் அநுரவின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மக்கள் கூர்ந்து பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். அவர் செய்யும் ஒவ்வொரு நியமனமும் அரசியலில் அவரது சிந்தனை மற்றும் முதிர்ச்சியை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அது மாற்றத்தை எப்படிப் பிரதிபலிக்கப்போகிறது என்பதில் அவர்கள் அக்கறையோடு இருக்கின்றார்கள். ஏனெனில் அவர்களிடம் நம்பிக்கை மட்டுமே எஞ்சியிருக்கின்றது.

பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே அநுரவின் முன்னாள் உள்ள பெரும் சவால். இந்தச் சிக்கலுக்கு அவர் உடனடியாகத் தீர்வு காணவேண்டும். தேர்தலுக்கு முன்னர், சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சு நடத்துவோம் என்று அநுர அறிவித்திருந்தார். தேர்தலின் பின்னர் அவருடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கின்றோம் என்று நாணய நிதியமும் அறிவித்திருந்தது. மீண்டும் பேச்சு நடத்தினால் சர்வதேசக் கடன்களைத் தீர்ப்பதற்கான கால அவகாசத்தை நீடிக்கும்படி அவர் நாணய நிதியத்திடம் கேட்கலாம். அதற்குச் சாதகமான பதில்தான் கிடைக்கவேண்டும் என்பதில்லை. ''ஏற்கனவே எல்லாமும் தீர்மானிக்கப்பட்டுவிட்டன'' என்று கூறி நாணய நிதியம் அவரது கோரிக்கையை நிராகரிக்கலாம். ஆனால், தான் இந்த விடயத்திற்குப் புதியவன் என்பதால் தனக்கு மேலதிக கால அவகாசம் தரப்படவேண்டும் என்று அவர் வாதிடலாம். அதைத் தவிர நாணய நிதியத்தின் பொறியிலிருந்து உடனடியாக வெளியேறும் வல்லமையும் அவரிடம் இல்லை. நிர்வாகத்தில் சோசலிச அம்சங்களை மேலும் இணைத்து இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்லவும் அதேசமயத்தில் சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்தவும் முடியாது என்பதை அவர் விரைவில் கற்றுக்கொள்வார். அவருக்கு சீனா என்னதான் ஆதரவாக இருந்தாலும் யதார்த்தம் என்ன என்பதை அவர் விரைவில் புரிந்துகொள்வார்.

## இளம் குடும்பஸ்தரின் சடலம் இலுப்பைக்கடவையில் மீட்பு



மன்னார், இலுப்பைக்கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பியாறு அந்தோனியார் ஆலய வளாகத்தின் பின்பகுதியில் உள்ள சிற்றாலயத்திற்கு முன்பாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் வியாழக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் உயிலங்குளம் முதலை குத்தி பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஆவார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற மன்னார் திடீர் மரண விசாரணை அதிகாரி பா.பிரபாநந்தன் சடலத்தைப் பார்வையிட்டுள்ள நிலையில், அதனை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து, சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இலுப்பைக்கடவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(05)



# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 77,908 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன

## ஸார்ப் நிறுவனம் தெரிவிப்பு



கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 31 லட்சத்து 43 ஆயிரத்து 871 சதுரமீற்றர் பரப்பளவு நிலப் பகுதியிலிருந்து 77,908 அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன என ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே



மேற்கண்ட விபரத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கையின்வடபகுதியில்மனிதாபிமானகண்ணிவெடி அகற்றலில்ஜப்பான்மற்றும்அமெரிக்காநாட்டுநிதிஉதவியுடன் ஈடுபடும் ஸார்ப், மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2024 செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தச்சடம்பன், அம்பகாமம், ஒழுமடு, மாங்குளம், கொக்காவில் பகுதியிலும், புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகத்தின்கீழ் உள்ளபகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் கண்டாவளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டி பகுதியிலும் 31 லட்சத்து 43 ஆயிரத்து 871 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 77,908 அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடி அகற்றும் பணிகளை புதுக்குடியிருப்பு, அம்பகாமம் இமாங்குளம், கொக்காவில், தட்டுவன்கொட்டி மற்றும் ஆனையிறவிலும் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# கொட்டாவையில் லொறி மோதி வயோதிபர் இறப்பு; சாரதி கைது

பிலியந்தலை-கெஸ்பேவ வீதியில் கொட்டாவை பிரதேசத்தில் லொறி மோதி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தவிபத்துபுதன்கிழமை அதிகாலைஇடம்பெற்றுள்ளது.

பிலியந்தலையிலிருந்து கெஸ்பேவநோக்கிப்பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்த வயோதிபர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது, படுகாயமடைந்த வயோதிபர் களுபோவில வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டபின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய வயோதிபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, லொறியின்சாரதிசந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பானமேலதிக விசாரணைகளை பிலியந்தலை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(05)

# மற்றொரு அமைச்சு செயலாளர் புதிதாக நியமனம் பெற்றுள்ளார்



கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம் அமைச்சின் புதிய செயலாளராக ஏ.எம்.பி.எம்.பீ. அத்தபத்து தனது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணம் அமைச்சின் புதிய செயலாளர் ஏ.எம்.பி.எம்.பீ. அத்தபத்து அவர்கள் பத்தரமுல்லை, செத்சிறிபாயவிலுள்ள தனது அலுவலகத்தில் புதன்கிழமை பதவியைபொறுப்பேற்றுக்கொண்டார்.

திறைசேரியின் வெள;வேறு பிரிவுகளில் 26 வருட காலத்துக்கு அதிகமானசேவைஅனுபவம்உடைய இவர் இதற்கு முன்னர் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகாரியாகவும் கடமையாற்றி இருக்கின்றார்.

அத்துடன் அவர் வியாபார மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றி இருக்கின்றார்.

அவர் ஜயவர்தனபுர பல்கலைக்கழக்தின் முகாமைத்துவ பட்டம், ஆஸ்திரேலியாவின் பிலிண்டர்ஸ் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அபிவிருத்தி பற்றிய முதுமாணிப் பட்டம், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார அபிவிருத்தி பற்றிய பட்டப் பின் டிப்ளோமா, ஜப்பான்அபிவிருத்திபொருளாதாரநிறுவனத்தின்அபிவிருத்திப் பொருளாதாரம் பற்றிய பட்டப் பின் டிப்ளோமா ஆகிய தகமைகளைக் கொண்டிருக்கிறார்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# ஈஸ்டர் தாக்குதல் மேற்கொண்டவர்களிற்கு ராணுவப் புலனாய்வு பிரிவினர் நிதி உதவி?




முழுமையானவிசாரணைகள்இடம்பெறவேண்டும் என சிஐடியின் முன்னாள் இயக்குநர் வேண்டுகோள்

உயிர்த்தஞாயிறுதாக்குதல்கள்தொடர்பிலும்அதன் பின்னர் இடம்பெற்ற விசாரணைகள் தொடர்பிலும் சிஐடியின் முன்னாள் இயக்குநர் ஷானி அபயசேகர அதிர்ச்சி தகவல்களை வெளியிட்டுள்ளார்.

பத்திரிகையாளர் சுனந்த தேசப்பிரியவின் நூல் வெளியீட்டின் பின்னர் உரையாற்றுகையில் அவர் இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் முக்கிய தருணங்களின் போது இராணுவ புலனாய்வாளர்கள் சிஐடியினரை தவறாக வழிநடத்தினார்கள் எனத் தெரிவித்துள்ள அவர் புலனாய்வு அமைப்புகளிற்கும் தாக்குதல்களை மேற்கொண்டவர்களிற்கும் இடையில் நிதி தொடர்புகள் காணப்பட்டிருக்கலாம்எனபாரதூரமானகரிசனையை வெளியிட்டுள்ளார்.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி 250 பேரை பலிகொண்ட தாக்குதல் தனித்த ஒரு சம்பவம் அல்ல, நன்கு திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்ட ஒன்று எனத் தெரிவித்துள்ள அவர் விசாரணைகளின் போது இராணுவபுலானய்வு பிரிவினர் இரண்டு தடவை விசாரணையாளர்களை தவறாக வழிநடத்த முயன்றனர் என தெரிவித்துள்ளார்.

தெகிவளையில் உயிரிழந்த தற்கொலை குண்டுதாரி தொடர்பாக இராணுவ புலனாய்வு பிரிவினர் தவறாக வழிநடத்தினார்கள் என தெரிவித்துள்ள ஷானி அபயசேகர, அந்த தற்கொலை குண்டுதாரிக்கு இராணுவ புலனாய்வாளர்களுடன் தொடர்பிருக்கலாம் இது மறைக்கப்பட்டது என குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவதாக உயிர்த்த ஞாயிறுதாக்குதலிற்கு முன்னர் இடம்பெற்ற வவுணதீவு படுகொலைகளை( 2018) விடுதலைப்புலிகளே மேற்கொண்டனர் என இராணுவபுலனாய்வு பிரிவினர் குற்றம்சாட்டினார்கள், தங்களின் கதையை வலுப்படுத்துவதற்காக இராணுவசீருடையைஅங்குமறைத்துவைத்தனர்என சிஐடியின் முன்னாள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

ஏப்பிரல் 25 ஆம் திகதி இந்த படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரை சிஐடியினர் ஆயுதங்களுடன் கைதுசெய்த பின்னரே உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு காரணமான ஜஹ்ரான் ஹாசிம் குழுவினர் இந்த கொலையுடன் தொடர்புபட்டுள்ளனர் என்பது தெரியவந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த புலனாய்வு பிரிவின் உயர் அதிகாரியொருவர் தாக்குதலை மேற்கொண்ட குழுவினருக்கு தாக்குதலிற்கு இலங்கையின் புலனாய்வு பிரிவினர் நிதி உதவி செய்தனர் என தெரிவித்திருந்தார், இது குறித்து முழுமையாக விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என ஷானி அபயசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுணதீவு கொலையை விடுதலைப்புலிகளே மேற்கொண்டனர் என நான்கு தடவை இராணுவ புலனாய்வாளர்கள் தவறாக வழிநடத்தினார்கள் என தெரிவித்துள்ளஷானிஅபயசேகர இதற்கான நோக்கம் என்னவென சந்தேகம் வெளியிட்டுள்ளார். (05)



# லிட்ரோ எரிவாயு நிறுவன தலைவர் இராஜினாமா

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி முதித பீரிஸ் லிட்ரோ நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அதற்குமுன்,அவர்அரசாங்கத்துக்கு சொந்தமான எல்பி எரிவாயு விநியோக நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளராக பணியாற்றினார்.

அத்துடன், , லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட், லிற்றோ ஹாஸ் ரேமினல்லங்காபிறைவேட்லிமிடெட் ஆகிய இரண்டு நிறுவனங்களின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

(05)

# விமான நிலையத்தில் பயணிகளிடம் திருட்டு

## ஊழியர் ஒருவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தரும் பயணிகளின் பயணப்பொதிகளிலிருந்து பெறுமதியான பொருள்களைத் திருடியதாக கூறப்படும் விமான நிலைய ஊழியர் ஒருவரைகட்டுநாயக்கவிமானநிலைய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்கவிமானநிலையத்தின் பயணப் பொதிகள் சேமிப்பு பிரிவில் பணிபுரியும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஊழியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்நீர்கொழும்பு திம்பிரிகஸ்கட்டுவ பிரதேசத்தில் வசிக்கும் 22 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தரும் பயணிகளின் பயணப்பொதிகளிலிருந்து பெறுமதியான பொருள்களை திருடிச்செல்லும்காட்சிகள்கட்டுநாயக்க விமானநிலையத்தில்உள்ளபாதுகாப்பு கமராவில் பதிவாகியுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தரும் பயணிகளின் பெறுமதியான பொருள்கள் திருடப்படுவதாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு நீண்ட நாள்களாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# நியாயமான காரணங்கள் இருந்தால் வாக்களிப்பு நிலையத்தை மாற்றலாம்

## ஒக்டோபர் 1க்குள் விண்ணப்பிக்கவேண்டும்

தமது வதிவிட பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு மத்திய நிலையத்தில் வாக்களிக்க முடியாத நிலை காணப்படும் வாக்காளர்கள் பிறிதொரு வாக்களிப்பு மத்திய நிலையத்தில் வாக்களிக்க அனுமதியளிக்குமாறு கோரிக்கை விடுக்க முடியும். 2024.10.01 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவிலோ அல்லது மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகங்கள் ஊடாக விண்ணப்பிக்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127 (ஆ) பிரிவின் கீழ் தமக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் வாக்கெடுப்பு நிலையத்தில் தனது வாக்கினையளிக்க முடியாது என்று நியாயமான அச்சமடையும் வாக்காளர்கள்,பிறிதொரு வாக்களிப்பு மத்திய நிலையத்தில் வாக்களிப்பதற்கு அனுமதியளிக்குமாறு கோரிக்கை ஒன்றை முன்வைக்க முடியும்.

எவரேனும் வாக்காளர் அவரது விண்ணப்பப்பத்திரங்களை 2024.10.01 ஆம் திகதிக்கு முன்னர் இராஜகிரிய சரண மாவத்தை என்ற முகவரியில் உள்ள தேர்தல்கள் செயலகத்தக்கோ அல்லது தாம் வசிக்கும் மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல்கள் அலுவகத்துக்கோ சமர்ப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரர் 2024 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பப் பத்திரங்களை பூர்த்தி செய்தல் வேண்டும். அந்த இடாப்புக்கள் அனைத்தும் மாவட்ட செயலகங்களிலும் , கச்சேரிகளிலும் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலும் வைக்கப்படும். அத்தோடு 2024 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பின் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்களை இணையத்தளத்தினூடாக பரீட்சிக்க முடியும்.

விண்ணப்பப் பத்திரத்தில் காணப்படும் தகவல்கள்சரியானவையெனவிண்ணப்பதார் வதியும் பிரதேசத்தின் கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரங்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் ,இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும், அத்துடன் இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்யலாம் என்றுள்ளது.

(05)

# புதிய மது விற்பனை நிலையத்தை மூட ரிஷாத் பதியுதீன் கோரிக்கை



மன்னார் பிரதான வீதியில் புதிதாக திறக்கப்பட்ட மது விற்பனைநிலைய அனுமதிபத்திரத்தைரத்து செய்யுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன்இந்தக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

குறித்த மதுபானசாலை பாடசாலை , ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் மக்கள் குடியிருப்புக்கு அருகில் அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மதுபானசாலை திறக்கப்பட்டுள்ளமையானது குறித்த பகுதி மக்களிடையே பாரிய மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளதுடன், இந்த விடயம் தொடர்பில் கடந்த மாதம் போராட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(05)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய மூன்று உணவகங்களுக்கு பூட்டு

சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த மூன்று உணவகங்கள் 14 நாள்களுக்கு மூடப்பட்டுள்ளதுடன், ஐந்து உணவகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மஹரகம பொது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

மஹரகம பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போதே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, சுமார் 37 உணவகங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன், சில உணவகங்களுக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் மஹரகம பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.(05)

## மூத்த....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் அளித்து அவர்களுக்கு தொடர்ந்தும் துணை நிற்க முடிவுசெய்துள்ளேன்.

தமிழ் மக்களின் அரசியல் தலைமைத் துவத்திற்கு இளைஞர்களின் பங்களிப்பு அதிகமாக வேண்டிய தருணம் வந்துள்ளது. அதனை ஏற்று தமிழ் மக்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இளையோருக்கு தமது ஆதரவினை அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த சந்தர்ப்பத்தில், கடந்த முறை நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் எனக்கு வாக்களித்து என்னை நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்த மக்களுக்குஎனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் நாடாளுமன்ற உறுப்பினராக பதவிவகித்த இந்த காலக்கட்டத்தில் என்னால் முடிந்தளவுக்குநாடாளுமன்றத்திலும்சர்வதேச அரங்கிலும் எனது மக்களின் பிரச்சினைகள், துன்பங்கள்,துயரங்கள்மற்றும்அபிலாஷைகள் பற்றி எடுத்துக் கூறியுள்ளேன்.

குறிப்பாக,தமிழ்மக்களின்வரலாறுமற்றும் உரிமைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வினை சிங்கள மக்கள் மத்தியில் என்னால் ஏற்படுத்த முடிந்துள்ளதாக நம்புகின்றேன். நில ஆக்கிரமிப்பை தடுப்பதற்கு சர்வதேச ரீதியான மாநாடுகள் நடத்தி மற்றும் ஒரு ஆவணப்படம் ஒன்றையும் நான் எனது நண்பர்களுடன் இணைந்துமேற்கொண்டிருந்தேன். என்னால் முடிந்தவரை இதே பாதையில் தமிழ் மக்க ளுக்கான எனது அரசியல் பயணம் தொடரும்.

எனது வீடு கொழும்பில் இருந்தாலும், நான் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து தங்கியிருந்து தமிழ்மக்கள்கூட்டணி ஊடாக எனது அரசியல் சேவையை முன்னெடுப்பேன். சர்வதேச ரீதியாக எனக்கு இருக்கும் தொடர்புகளின் ஊடாக எமது மக்களின் சுயநிர்ணய உரிமையினை வென்றெடுப்பதற்கு நான் தொடர்ந்து உழைப்பேன் - என்றுள்ளது.

## வலி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறப்பதன் மூலம் யாழ் சர்வதேச விமான நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கான தொடர்பை கணிசமாக மேம்படுத்த முடியும்.

காங்கேசன்துறை - கீரிமலை வீதி (ஜனாதிபதி அரண்மனை வீதி): வரலாற்று மற்றும் கலாசார தளத்திற்கு இட்டுச்செல்லும் இந்த வீதி மீண்டும் திறக்கப்படுவதால், உள்ளூர் சமூகங்கள் பயனடைவதுடன், இப்பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்தும்.

ஆகவே யாழ்ப்பாண மக்கள் அமைதி மற்றும் இயல்பு நிலைக்கான உறுதியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ள சூழலில், இந்த வீதிகளை மீண்டும் திறக்க அனுமதிப்பதால்நல்லிணக்கம்மற்றும்பிரதேச வளர்ச்சி ஆகியன வலுவடைவதுடன், எமது மக்களின் நீண்டகால கவலையை நிவர்த்தி செய்து, அனைத்துப் பகுதிகளிலும் சமமான வளர்ச்சிக்கான உங்கள் நிர்வாகத்தின் அர்ப்பணிப்பையும் நிரூபிக்கும்.

ஆகவே இவ்வீதிகள் மீளத் திறப்பதால் யாழ்ப்பாண மக்களுக்குப் பெரிதும் பயனளிக்கும் என்பதோடு எமது தேசத்தின் அமைதியான வளமான எதிர்காலத்துக்கும் உறுதுணையாக அமையும் என்பதால், இந்த வேண்டுகோளுக்கு உங்களது கவனம் செலுத்தப்படும் என்று நான் நம்புகிறேன். என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காற்றாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவில் அமைக்கப்படும் காற்றாலை மின்சார திட்டத்துக்கானஒப்பந்தத்தை இரத்துசெய்வதாக கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த உறுதிமொழியை சுட்டிக்காட்டியேமக்கள்தமதுகோரிக்கைகளை தபாலட்டைகளில் பதிவு செய்துள்ளனர்.

மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இந்த தபாலட்டைகள் மன்னார் தபாலகத்தின் ஊடாக ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மற்றுமொரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எம். விஜேபண்டாரவிடம் கையளிக்கப்பட்டது.

கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவரான விஜேபண்டார, கொழும்பு பல்கலைக்கழகத்தில் இளங்கலை (கௌரவ) பட்டம், திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி (கௌரவ) பட்டத்தையும் பெற்றுள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி ஜே. எம். விஜேபண்டார, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முன்னாள் விரிவுரையாளரும் ஆவார்.

## ஐக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரத்தில் இருப்பதைவிட இவ்வாறு மாற்றம் ஏற்படுவது நல்லது. அதனால் மக்கள் ஆணைக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம். என்னை பொறுத்தவரை நான் 40 வருடமாக அரசியலில் இருந்து வருகிறேன். அதனால் நாங்கள் எதிர்க்கட்சியிலும் இருந்துள்ளோம். ஜனாதிபதி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டி இருக்கிறது. அதனை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

இடம்பெறவுள்ளநாடாளுமன்றதேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவதில்லை என அறிவித்திருக்கிறார். அதனால் அவரை பிரதமர் வேட்பாளராக்குவது தொடர்பில் நாங்கள் அவருடன் கலந்துரையாடவில்லை. என்றாலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் இடதுசாரி கொள்கையுடைய கட்சிகளை இணைத்துக்கொண்டு பரந்துபட்ட கூட்டணி அமைத்துக்கொண்டு தேர்தலில் போட்டியிடுவதற்கே கலந்துரையாடி வருகிறோம்.

அதேநேரம் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கியதேசியகட்சியும்தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றன. அந்த கலந்துரையாடல்களில் நாங்கள் இல்லை. அவர்கள் இரண்டு தரப்பினரும் ஒன்றாக இருந்தவர்கள். அதனால் அவர்கள் ஒன்றாக இணைந்து போட்டியிடலாம். ஐக்கிய மக்கள் சக்தி என்பது தாராளவாத முதலாளித்துவ கொள்கையுடைய கட்சி. அதனால் அந்த கட்சியுடன் எங்களுக்கு இணைந்துசெயற்படமுடியாது. எமது அரசியல் நிலைப்பாட்டுடன் இணைந்து செயற்பட முடியுமான குழுவொன்று இருக்கிறது. அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கே நாங்கள் முயற்சிக்கிறோம் என்றார்.

## பதில் பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமாநாயக்கவினால்ஜனாதிபதிஅலுவலகத்தில் இன்றையதினம் வழங்கப்பட்டுள்ளது.

## எதிர்க் கட்சிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கே எதிர்பார்க்கிறோம்.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் அவ்வாறு இருப்பதாகவே எமக்கு தோன்றுகிறது. அவ்வாறான பரந்துபட்ட கூட்டணியை அமைக்குமாறே அனைவரும் வற்புறுத்தி வருகின்றனர்.

அதனால் இந்தக் கூட்டணியை அமைப்பதற்காக தற்போது ஐக்கிய மக்கள் சக்தியுடனான கலந்துரையாடலை ஆரம்பித்திருக்கிறோம்.

அதேபோன்று மொட்டு கட்சியின் பெரும்பான்மை பிரிவினர், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களுடனும் கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது.

ஓரிரு தினங்களில் இந்த கலந்துரை யாடல்களை முடிவுக்கு கொண்டுவர முடியும். அதனால் வரலாற்றில் பெரிய கூட்டணி அமைத்து இந்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட முடியும் என எதிர்பார்க்கிறோம்.

பல்வேறு தரப்பினர்கள் கட்சிகளுடன் கலந்துரையாடியவிடயங்களைஐக்கியதேசியக் கட்சியின்தலைவர்ரணில்விக்ரமசிங்கவுடனும் நாங்கள் கலந்துரையாடினோம்.

ரணில்விக்ரமசிங்கவின்ஆலோசனையின் பிரகாரம் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இரண்டு தினங்களுக்குமுன்னர்கலந்துரையாடினோம். நேற்றும் கலந்துரையாடினோம்.

அந்தக் கலந்துரையாடல் சாதகமாக அமைந்துள்ளது. ஆரம்பத்தில் ஐக்கிய மக்கள் சக்தி இந்த பேச்சுக்கு பின்வாங்கியபோதும் தற்போது அவர்கள் கலந்துரையாடல்களுக்கு இணக்கம் தெரிவித்து, ஆரோக்கியமான பல கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள்.

அதனால் தொடர்ந்தும் அனைத்து தரப்பினருடனும்கலந்துரையாடிஎப்படியாவது நாடாளுமன்ற தேர்தலில் கூட்டணியாக போட்டியிடவே நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

கூட்டணி அமைத்து போட்டியிடுவதன் மூலமேஎமக்குதேர்தலில்எதிர்பார்ப்புபெறுபேறை ஏற்படுத்திக்கொள்ள முடியும். எமது ஆதரவாளர்களின் எதிர்பார்ப்பும் அதுவே என்றார்.

## கிரேக்க பிணைமுறி வாங்கிய ஊழல் வழக்கில்

# அஜித் நிவாட் கப்ராலுக்கு நீதிமன்று அழைப்பாணை

கிரேக்க முறிகள் கொடுக்கல், வாங்கல் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளிட்ட ஐவரை அடுத்த மாதம் 10 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க உத்தரவிட்டார்.

கடும் பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த போது கிரேக்க அரசால் வெளியிடப்பட்ட திறைசேரி பத்திரங்களை கொள்வனவு செய்ததையின் ஊடாக அரசுக்கு 184 கோடி ரூபாவுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதற்கு முன்னர் இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டதுடன், ஆணைக்குழுவின்பணிப்பாளர்நாயகத்தினால் குற்றப்பத்திரிகையில் கையெழுத்திடப்பட்ட தினம் தொடர்பில் முன்வைக்கப்பட்டிருந்த தொழினுட்ப கோளாறு காரணமாக பிரதிவாதிகள் விடுவிக்கப்பட்டனர்.

தொழினுட்ப கோளாறை நிவர்த்தி செய்து ஆணைக்குழுவினால் கடந்த ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி மீண்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கமைய இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், முன்னாள் பிரதி ஆளுநர் தர்மசேன தீரசிங்க, தொன் வசந்த ஆனந்த சில்வா, சந்த்ரசிறி ஜயசிங்க பண்டித சிறிவர்தன மற்றும் எம். ஏ. கருணாரத்ன ஆகியோரை மன்றில் முன்னிலையாகுமாறு தெரிவித்து நீதிமன்றத்தினால் அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## உயிர்த்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலை சமர்ப்பித்தால் தற்போது மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள நட்டஈடு வழக்குகளை வாபஸ் பெற முடியும் என்று பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் சார்பில் முற்பட்டிருந்த ஜனாதிபதியின் சட்டத்தரணி ஷமில் பெரேரா நீதிமன்றில் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களால் தாக்கல் செய்யப்பட்ட சுமார் 300 நஷ்டஈடு வழக்குகள் நீர்கொழும்பு மற்றும் கொழும்பு மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

இந்த வழக்கில் உத்தரவிடப்பட்டுள்ள முழு இழப்பீட்டுத் தொகையான 75 மில்லியன் ரூபாவை செலுத்தத் தவறியதன் காரணமாக அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டை தாக்கல் செய்துள்ளதாகவும் மேலதிக சட்ட மா அதிபர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சுற்றிவளைப்பில் துப்பாக்கிகளுடன் மூவர் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகளையும் ரி -56 ரக துப்பாக்கியொன்றையும் வைத்திருந்த மூவர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுகங்முவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெல்கஹமடில்ல பகுதியில் உள்ள கடை ஒன்றில் ரி - 56 ரக துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், துப்பாக்கி எண் அழிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கும்பலொலுவ பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாய் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, நாவுல, அரிஸ்டன் வீதி பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொங்கஹவெல பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவராவார்.

மேலும், எத்திமலை, தொரத்துபிட்டிய பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் மற்றுமொரு சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் அத்தமலை குளம் பகுதியில் வசிக்கும் 39 வயதுடையவராவார்.

இதனையடுத்து, குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருவதாகத் தெரிவித்துள்ளனர். (05)

# ஜ.ம.முவின் புதிய செயலாளராக பரணீதரன் நியமனம் பெற்றார்



ஜனநாயக மக்கள் முன்னணி பொதுச் செயலாளராக முருகேசு பரணீதரன் நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் செயலாளராக பதவி வகித்த குருசாமியின் இராஜினாமாவை அடுத்து அரசியல் குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக கட்சியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் -

ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்த கே.ரி.குருசாமி கட்சித் தலைவர் மனோ கணேசனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தான் கட்சி மற்றும் கூட்டணி பதவிகளில் இருந்து சுயவிருப்புடன் இராஜினாமா செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து கொழும்பில் தலைவர் மனோ கணேசன் தலைமையில் கூடிய ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழு, இந்த இராஜினாமாவை ஏற்றுக் கொண்டு வெற்றிடமாகவுள்ள பொதுச் செயலாளர் பதவிக்கு முருகேசு பரணீதரன் ஏகமனதாக நியமித்தது.

முருகேசு பரணீதரன் கட்சியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர் மற்றும் பிரச்சார செயலாளர் ஆகிய பதவிகளை வகிக்கும் அதேவேளை ஜனநாயக மக்கள் முன்னணியினதும், தமிழ் முற்போக்கு கூட்டணியினதும் அரசியல் குழு உறுப்பினராகவும் பதவி வகிக்கின்றார்.

மேலும், அரசியல் குழுவில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள தமிழர் முற்போக்கு கூட்டணி அரசியல் குழுவில் முற்போக்கு கூட்டணி அரசியல் குழுவில் கலந்துபேசி அங்கே எடுக்கப்படும் முடிவுகளுக்கு அமைய செயற்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.(05)

# ஜ.ம.மு வின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து குருசாமி விலகல்



ஜனநாயக மக்கள் முன்னணி பொதுச்செயலாளர் பதவியில் இருந்து கே.ரி குருசாமி விலகியுள்ளார்.

இது குறித்து கட்சியின் தலைவர் மனோ கணேசனுக்கு அவர் வியாழக்கிழமை கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது -

இலங்கையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலையும் தேர்தலின் முடிவுகளையும் அதன்பின் நடக்கின்ற நிகழ்வுகளையும் உற்று நோக்கும் போது மக்களின் மனதில் மிகப்பெரிய மாற்றத்ததையும் அவர்களின் எதிர்ப்பார்ப்பு உயர்ந்திருப்பதையும் காண்கின்றோம்.

மக்களின் எண்ணத்திற்கு ஏற்றவாறு செயற்படவும் அவர்களின் எதிர்ப்பார்ப்புக்கு ஏற்றவாறு என்னை உயர்த்திக்கொள்ள வேண்டிய அவசியத்தில் உள்ளேன்.

மக்களின் நலனுக்காக அவர்களின் வாழ்வாதார வளர்ச்சிக்காக என்னை அர்ப்பணிக்கவும் இன்னும் அதிகமாக உழைக்கவும் மக்களுக்காக என்னை ஆளுமைப்படுத்திக்கொள்ளவும் தீர்மானித்துள்ளேன்.

ஆகவே, மக்களோடு நேரடியாக களத்தில் பணி செய்ய விரும்புவதால் கட்சியோடு இதுவரையில் வகித்து வந்த ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர், தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழு உறுப்பினர் பதவிகளில் இருந்தும் 26 ஆம் திகதி உடனடியாக விலகிக்கொள்கின்றேன்.

இது நாள் வரையில் தங்களோடும் கட்சியோடும் பயணித்த 13 ஆண்டு கால அரசியல் பாதையில் என்னை வழிநடத்தியதற்கும் நெறிப்படுத்தியதற்கும் என் மன நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, கட்சியின் சக உறுப்பினர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# இன்று வைரவிழா அகவையில் கால் பதிக்கும் வி.ரி.சகா

## பாசிக்குடா அமயா விடுதியில் மணிவிழா கொண்டாட்டம்



பிரபல ஊடகவியலாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான தேசமான்ய வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா இன்று (28) வைரவிழா அகவையில் கால் பதிக்கிறார்.

36 வருட கால கல்விச் சேவையிலிருந்து சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நேற்று (27)வெள்ளிக்கிழமை தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றார்.

இவரது 60 வது அகவை பிறந்த நாளான இன்று(28) சனிக்கிழமை பாசிக்குடா அமயா விடுதியில் அவர் சார்ந்த மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 1991/92 புலன அணியினர் மணிவிழாக் கொண்டாட்டத்தை பொன் .நடராஜா தலைமையில் முன்னெடுக்கின்றனர்.

சம்மாந்துறை வலயத்தில் 26 வருடங்களாக மேலாக சேவையாற்றி வெள்ளி விழாக் கண்ட ஒரே ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளரும், சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றியத்தின் தலைவருமான விபுலமாமணி வித்தகர் வி.ரி.சகாதேவராஜா(ஜே.பி) காரைதீவைச் சேர்ந்தவராவார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் மிகவும் நெருங்கிய பற்றாளனான இவர் பத்து வருடங்கள் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும் சம்மாந்துறை வலயக்கல்விப்பணிமனையில்26வருடங்கள்உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார் .

பேராதனை பல்கலைக்கழக கலைத்துறை பட்டதாரியான இவர் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராவார். பட்டப்பின் கல்வி டிப்ளோமோ மற்றும் கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றவராவார்.

இலங்கை அதிபர் சேவையின் முதலாந்தர அதிபராவார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவராக அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவராக காரைதீவு விபுலானந்தா ஞாபகார்த்த பணிமன்றத் தலைவராக இந்துசமய விருத்திச்சங்க தலைவராக காரைதீவு விளையாட்டு கழகத் தலைவராக கம்பன் கலைக்கழகத் தலைவராக கிராம அபிவிருத்தி சங்க தலைவராக இவ்வாறு பல அமைப்புகளில் தலைவராக முன்னணி சமூக செயற்பாட்டாளரான அவர் ஒரு தலைசிறந்த ஊடகவியலாளரும் கூட.

சம காலத்தில் மேற்குறிப்பிட்ட அமைப்புகளின் ஆலோசகராக மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபையின் ஆலோசகராக இவ்வாறு பல நடிபங்குகளினூடாக சமூக சமய சேவையாற்றி வருகிறார்.

காரைதீவின்பழம்பெரும்ஆசிரியர்வே.தம்பிராஜா தங்கநாயகம் தம்பதிகளின் கனிஸ்ட புதல்வராவார்.

காரைதீவில் 1964.09.28 அன்று பிறந்தார் .

ஆரம்பக்கல்வியைராமகிருஷ்ணசங்கஆண்கள் பாடசாலையிலும் பின்னர் விபுலானந்த மத்திய கல்லூரியிலும் மற்றும் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் கல்வி பயின்றார்.

'ஊழியின் ஆழி' எனும் வரலாற்று நூலை 2005 வெளியிட்டார். மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் முத்தமிழ் மன்ற தலைவராக பணியாற்றிய வேளை அங்கு 'கலைச்செல்வி' நூலுக்கு நூலாசிரியராகவும் சுவாமி விபுலானந்த பணிமன்றத்தின் அடிகளார் நினைவாலய மலருக்கும் சுவாமி நடராஜானந்தா ஜீயின் நூற்றாண்டு விழாவில் சேவையின் சிகரம் எனும் நூலையும் ஊரா வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கையின் அதிசிறந்த ஊடக விருதான மக்கள் சேவை ஊடக விருது 2007 வீரகேசரி கட்டுரை வெளியீட்டுக்காக பெற்றார் .

இத்தாலி பாங்கொக் மலேசியா சிங்கப்பூர் பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு சென்று சிறப்பு அனுபவத்தை பெற்றிருந்தார்.

தேசமான்ய வித்தகர் திகாமடுல்ல அபிமானி விபுலமாமணி வாழ்நாள் சாதனையாளர் வித்யசாஹித்யன் வித்யகலாசிறி கலைச்செம்மல் போன்ற இன்னோரன்ன விருதுகளைப் பெற்றவர்.

அவர் மேலும் ஆன்மீக சொற்பொழிவு மற்றும் பிரசங்கங்களில் ஈடுபட்டு வருகிறார்.

நமது நிருபர்.

# தங்காலை வீதி அருகே ஆணின் சடலம் மீட்பு

அம்பாந்தோட்டை-தங்காலை பிரதான வீதிக்கு அருகில் வியாழக் கிழமை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என அம்பாந்தோட்டை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 50 வயது மதிக்கத்தக்கவர் எனவும் இவர் உயிரிழந்து பல நாள்கள் ஆகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவரது காலின் ஒரு பகுதியை மிருகங்கள் கடித்துள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாந்தோட்டை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு

# ஜனாதிபதி அநுரவிற்கு ஜோபைடன் வாழ்த்து





அமெரிக்கா ஜனாதிபதி ஜோபைடன் இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள அநுரகுமாரதிசநாயக்கவிற்குதனது வாழ்த்துக்களைதெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் தாங்கள் பெருமைப்படக்கூடிய சுதந்திரமான நியாயமான அமைதியான தேர்தலின் மூலம் உங்களைதங்கள்ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளனர் என ஜோபைடன் தெரிவித்துள்ளார்.

இந்தோபசுபிக்கில்சமாதானம் பாதுகாப்பு மற்றும் செழிப்பினை ஏற்படுத்துவதற்கு உங்களுடன் இணைந்து செயற்பட ஆர்வமாக உள்ளேன் என ஜோ பைடன் அநுரகுமாரதிசநாயக்க எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.09.2024இல் வெளியிடப்பெற்றது